26.02.2026 MCOP No.107/2018

சாட்சி: PW 1 பாண்டிமீனாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. 16.07.2018 தேதியிட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. இன்சூரன்ஸ் பாலிசி **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. ஆர்.சி.புத்தகம் **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. **குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. 1ம் மனுதாரரின் வங்கிக் கணக்குப்புத்தகம் **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
6. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
7. 2ம் மனுதாரரின் வங்கிக் கணக்குப்புத்தகம் **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
8. 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
9. எனது மகன் பன்னீர்செல்வத்தின் இறப்பு சான்றிதழ் **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
10. வாரிசு சான்றிதழ் **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
11. 16.07.2018 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
12. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **சான்றிட்ட நகல் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்த பன்னீர்செல்வம் என்னுடைய மகன் என்றால் சரிதான். விபத்தின்போது அவருக்கு திருமணம் நடக்கவில்லை என்றால் சரிதான். 2ம் மனுதாரர் தனலெட்சுமி என் மகள் என்றால் சரிதான். 2ம் மனுதாரருக்கு திருமணம் நடைபெற்றுவிட்டதா என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தின்போது என் மகன் இருசக்கரவானத்தில் மற்றொரு நபரை உடன் ஏற்றிச் சென்றால் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் வீட்டில் இருந்தால் தாக்கல் செய்யதயாராக உள்ளேன்.

2. விபத்து நடந்தவுடன் போலிஸாருக்கு புகார் கொடுத்தது நான் தான் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் போலிஸார் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என் மகன் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியுள்ளார் என்று நான் கூறியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி முதல் தகவல் அறிக்கை என் மகன் தலைகவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்தின்போது போது என் மகன் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. விபத்து என் மகனின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், என் மகன் தான் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் டிராக்டர் வாகனமா என்றால் ஆமாம்.

3. டிராக்டர் வாகனத்தை ஓட்டியவருக்கும் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. டிராக்டருக்கு பின்புறம் உள்ள ட்ரெய்லருக்கும் காப்பீடு எடுக்கவேண்டும் என்று சொன்னால் எனக்கு அதுபற்றித் தெரியாது. ட்ரெய்லரின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியமா என்றால் தெரியாது. விபத்தின்போது என் மகன் என்ன

வேலை பார்த்துவந்தார் என்றால் சென்ட்ரிங் வேலை பார்த்து வந்தார். சென்ட்ரிங் வேலை பார்த்ததற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்காலிகமான வேலை என்பதால் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் என் மகனுக்கு 30 வயது என்று முதல் தகவல் அறிக்கையிலும், பிரேத பரிசோதனை அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நாங்கள் வயதை குறிப்பிடவில்லை.

4. விபத்திற்கு முழுமையான காரணம் என் மகன் தான் என்றும், அவர்தான் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு மறுவிசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது, கையெழுத்து மட்டும் போட தெரியும். புகாரை போலிஸார் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு வழக்கினை வாபஸ் பெற சொல்லி போலிஸார் கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதனால் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ள என்ற விபரம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரிதான். போலிஸார் புகாரினை பற்றி என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மேற்படி புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் அந்த கையொப்பம் என்னுடையதுான், கையெழுத்து என்னுடையது அல்ல. அறிவேன் சாட்சி கையொப்பம் எழுவும் வாங்கப்படவில்லை.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு மறு குறுக்கு விசாரணை:**

1. விபத்திற்கு முன்பு என் மகன் போலிஸாரிடம் எதாவது தவறுகள் செய்து மாட்டியுள்ளாரா என்றால் இல்லை. எனக்கும், போலிஸாருக்கும் எதாவுது தனிப்பட்ட முறையில் பிரச்சனைகள் உள்ளதா என்றால் இல்லை. போலிஸார் முறையான விசாரணை செய்த பின்புதான் முதல் தகவல் அறிக்கை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் போலிஸார் என்னிடம் முழுமையாக படித்து காண்பித்துதான் கையெழுத்து பெற்றார்கள் என்றால் இல்லை, என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. எனக்கு இழப்பீடு

கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யான தகவலை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.